சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல் முறைகள் சென்னை 08

ந.க.எண் 5993 / அ5/2022 நாள் 06.09.2022

பொருள் பள்ளிக்கல்வி – சென்னை மாவட்டம், தமிழ் மொழி இலக்கிய திறனறித்தேர்வு – அக்டோபர் 2022 - தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் ( CBSE/ICSE- உட்பட ) பள்ளித்தலைமையாசிரியர்கள் தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு பதிவேற்றம் செய்தல் – சார்ந்து

பார்வை 1 அரசாணை (நிலை) எண்89 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி ( த,வ 11) துறை நாள் 14.07.2022

2 சென்னை 06 அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடித்தத்தின் ந,க,எண் 101888/டி/2022 நாள் 12.08.2022 & 25.08.2022

பார்வை 2 இல் காணும் அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதம் இத்துடன் இணைத்து அனைத்து வகைப்பள்ளிகளுக்கு அனுப்பப்படுகிறது. தமிழ்மொழி இலக்கிய திறனறித்தேர்வு 01.10.2022 (சனிக்கிழமை) அன்று நடை பெறவுள்ளது, இத்தேர்வு தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் (CBSE/ICSE- உட்பட) www.dge.tn.gov,in என்ற இணையதளம் மூலமாக விண்ணப்ப படிவங்கள் 22.08.2022 முதல் 09.09.2022 வரை பதிவிறக்கம் செய்து கொள்ள முதன்மைக்கல்வி அலுவலரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது,எனவே மாணவர்களின் விண்ணப்பங்களை 25.08.2022 முதல் 09.09.2022 வரை பதிவேற்றம் செய்யலாம் என அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து வகைப்பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது,

சென்னை மாவட்டத்தில் மாணவர்கள் குறைந்த அளவில் விண்ணப்பத்துள்ளனர் என அரசுத்தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது. எனவே மாணவர்கள் அதிக அளவில் விண்ணப்பிக்குமாறுஅனைத்துப்பள்ளிதலைமையாசிரியர்கள்/முதல்வர்களின் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

மாவட்டக்கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளித்தலைமையாசிரியர்கள்/ முதல்வர்களுக்கு அதிக அளவில் மாணவர்களின் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தமாறு அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ஒம்/-

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1 அனைத்து பள்ளித்தலைமையாசிரியர் / முதல்வர்கள் சென்னை மாவட்டம்

2 அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர், சென்னை மாவட்டம்